# கடைக்குட்டியின் பிறந்தநாள் வாழ்த்து

அம்மா . . . .

நீங்கள் எமக்காக செய்த தியாகங்கள் தான் எத்தனை
எதை எழுதுவது எதை விடுவது
நீங்கள் எமை வளர்க்க பட்ட துன்பங்களை சொல்வதா - இல்லை
எதை சொல்வதம்மா . . .
எனக்கு பசியென்றால் என்னவென்று தெரியாமல் வளர்த்தீர்கள்
பாசத்திற்கு வீட்டில் குறைவில்லாமல் வளர்த்தீர்கள்
பள்ளி போகுமுன் எழுந்து அணைவருக்கும் உணவு செய்து
தலைவாரி விட்டு நேரத்திற்கு எமை அனுப்பி படிக்கவைத்தீர்கள்
பள்ளி விட்டு வந்தால் எனக்கு பசிக்குமென தினமும்
ஏதும் வாங்கி வைத்து தருவீர்கள்
பள்ளியால் எங்கு போவதென்றாலும்
பணமும் உணவும் தந்து சந்தோஷமாய் அனுப்பிவைப்பீர்கள் - இப்படி
எவ்வளவோ துன்பங்களின் மத்தியில் -எமை உருவாக்கி
இன்று உங்கள் பிள்ளைகள். மருமக்கள் பேரர்களுடன்
எழுபது அகவை கொண்டாடும் இத் தினத்தில்
எம் ஐயாவை ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றேன்
அவர் மட்டும் இருந்திருந்தால் . . . .
அவர் எம் மேல் கொண்ட பாசம் கடவுளுக்கே பொறுக்கவில்லை போலும்
இருப்பினும் அவர் அங்கிருந்து உங்களை மனமார வாழ்த்துவது தெரிகிறது
எழுபது அல்ல இன்னும் பல பத்துக்கள்
சுகத்துடன் நலமே வாழ இறைவனை வேண்டும்
உங்கள் பாசமுள்ள கடைக்குட்டி

மெரி